சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.313/2018

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | வயது | 55 |
| த/பெ | ராமசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மணி நகர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5, 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

பிராது தபசில் சொத்தில் என்ன உரிமை அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆரம்பத்தில் இருந்தே அனுபவத்தில் இருப்பதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். பிராது தபசில் சொத்து அரசு புறம்போக்கு சொத்து என்றால் சரி தான். அரசு புறம்போக்கு சொத்தில் அனுபவ பாத்திய உரிமை கோருவது தவறு என்றால் நாங்கள் 1950 ம் ஆண்டில் இருந்தே அனுபவித்து வருகிறோம். அவ்வாறு அனுபவித்து வருவதை காட்ட ஆவணம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் அரசு எங்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்கி உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேன். அந்த பட்டா எந்த புல எண்ணுக்கு, எத்தனை விஸ்தீரணத்திற்கு வழங்கப்பட்டது என்றால் புல எண். 254 க்கு, விஸ்தீரணம் 1 ½ செண்ட். ஆனால் நாங்கள் 5 செண்ட் அனுபவித்து வருகிறோம். அனுபவத்தில் இருந்து வருபவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை என்றால் நாங்கள் அந்த இடத்தை ஆரம்ப காலத்தில் இருந்தே உபயோகித்து வருகிறோம். அனுபவத்தில் இருந்து வருவதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்கள் அனுபவத்தில் இருந்து

வருவதில் 1 ½ செண்டுக்கு மட்டும் எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. அதனால் மீத இடத்திற்கும் பட்டா கோரி வட்டாட்சியரையும், நகராட்சியிலும் மனு கொடுத்து உள்ளோம். கால தாமதம் ஆனதால் நீதிமன்றத்தை அணுகுமாறு கூறி விட்டார்கள். அவ்வாறு நீதிமன்றத்தை அணுகுமாறு கூறிய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். நாங்கள் வட்டாசிரையோ, நகராட்சியையோ அணுகவில்லை என்றும், அவ்வாறு அணுகி இருந்தால் அவர்களும் விளக்கம் அளித்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் அனுபவ பாத்தியத்தில் இருப்பதற்கு இது வரை வரி எதாவது செலுத்தி உள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்துக்கு இறந்து போன 4 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் 5 முதல் 8 பிரதிவாதிகள் தண்டத் தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் எங்களது அனுபவத்தில் உள்ள இடத்திற்கு அவர்கள் பெயரில் தண்டத் தீர்வை வசூலிப்பது தவறு. அவர்களின் அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி தண்டத் தீர்வை செலுத்தி உள்ளார்கள். நாங்கள் பல முறை மனு அளித்து முயற்சி செய்த பின்னர் 4 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பி மெமோ இரத்து செய்யப்பட்டு விட்டது. இறந்து போன 4 ம் பிரதிவாதியின் பெயரில் தான் பி மெமோ இருந்தது என்றால் சரி தான். 4 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பி மெமோ இரத்து செய்யப்பட்டது என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் என்னிடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாய்மொழியாக சொன்னார்கள். தற்போது 4 ம் பிரதிவாதியிடம் தீர்வை வசூலிப்பது இல்லை. இத்தனை வருடங்களாக தாவா சொத்துக்கு தீர்வை செலுத்தவில்லை என்றால் சரி தான். நான் அரசு புறம்போக்கு நிலத்திற்கு வரி எதுவும் செலுத்தாமல் உரிமை கோர எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருந்த போது மேட்டுப்பாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்தார் என்றால் இல்லை. 4 ம் பிரதிவாதி தான் அ.வ.எண்.237/2007 என்ற வழக்கை தாக்கல்

செய்து இருந்தார். அந்த வழக்கு 2014 ம் ஆண்டில் 4 ம் பிரதிவாதி மேல் நடத்தாமல் தள்ளுபடி ஆகி விட்டது. அந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்து எதிர் வழக்குரையில் இந்த விவரங்களை சொல்லி உள்ளோம் என்றால் சரி தான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவரும் தாவா சொத்துக்களை பார்வையிட்டார் என்றால் அவ்வாறு இது வரை பார்வையிடவில்லை. நான் அரசு புறம்போக்கு நிலத்தை உரிமை கோருவது தவறு என்றும், அதற்கு எங்களுக்கு எந்த வித அடிப்படை உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 5 முதல் 8 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்வதாகவும், அவர்கள் ஆக்கிரமித்து உள்ளதாக கூறுவதும் தவறு என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.